# மதுரை மாநிலம் - ஆகஸ்டு 2018

# அகஇணைவு

## மையக்கருத்து: துறவற வாழ்வு தூயஆவியாரால் வழிநடத்தப்படுகிறது

### 1. துறவற வாழ்வு – வரையறையும், இலக்கும்

துறவற வாழ்வு என்பது நற்செய்தி அறிவுரைகளைக் கடைபிடிப்பதன் வழியாக அதிகக் கட்டின்மை (சுதந்திர) மனப்பான்மையுடன் கிறிஸ்துவைப் பின்பற்ற உறுதிபூண்டு ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்வாகும். தூய ஆவியாரால் தூண்டப்பட்டு தனிமையில் வாழ்ந்து வந்த ஆண்கள், பெண்கள் துறவறக் குடும்பங்களை உருவாக்கினர். திருச்சபையும் இவர்களை மனமுவந்து ஏற்று அதிகாரப்பூர்வமாக ஒப்புறுதி அளித்தது. இப்படித்தான் தொடக்கத்தில் பல்வேறு துறவற சபைகள் உருவாகின.

துறவற வாழ்வு இலக்கற்ற, பொறுப்பற்ற வாழ்வு அல்ல! மாறாக, தனது இன்பம் - துன்பம் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு இறைவனில் ஏழைகளுக்கு ஆற்றும் பணியில் மகிழ்வைக் காணத் துடிக்கும் வாழ்வாகும். 'இறைவன் எனது வாழ்வை நடத்திச் செல்கிறார்' என்ற இறை நம்பிக்கை வாழ்வு தான் துறவறம். துறவற வாழ்வு என்பது தனது தகுதியின்மையை உணர்வதும், இறைவனின் வல்லமையில் நம்பிக்கை வைத்து சரணாகதி அடைவதும் ஆகும். இத்தகையை நம்பிக்கைக்கும், சரணாகதிக்கும் தூய ஆவியானவரின் துணை அவசியம்.

### 2. தூய ஆவியின் வழிநடத்துதல் நம் முன்னோர் வாழ்வில்

தூய ஆவியின் வழிநடத்துதலைத் துறவியர் உணர அவர்கள் தங்கள் உள்குரலுக்குச் செவிமடுத்து, தற்கையளிப்பிற்கு முன்வர வேண்டுமம்.

- தூய ஆவியால் நிரப்பப்பட்ட அன்னை மரியா "இதோ ஆண்டவரின் அடிமை" என்று தன்னை முற்றிலும் இறைவனிடம் கையளித்ததால் இன்பத்திலும் துன்பத்திலும் எல்லாச்சூழலிலும் தூய ஆவியார் உடனிருந்து வழிநடத்தினார்.
- தூய ஆவியின் தூண்டுதலால் புனிதர்களின் வரலாற்றைப்படித்த புனித இஞ்ஞாசியார் "இவர்கள் புனிதத்தின் சிகரத்தை எட்டிப்பிடிக்க முடிந்ததென்றால் என்னால் ஏன் இயலாது?" என்று தன்னையே கேட்டுக்கொண்டு புனிதரானார்.
- தூய ஆவியால் தூண்டப்பட்ட நம் சபையின் முதல் அன்னையர்கள் துறவு வாழ்வை மேற்கொள்ளத் தயாராகினர். தூய ஆவியாரின் அருள்பெற்ற அருட்தந்தையர்கள் இவர்களைக் கொண்டு அமலவைக்கு அடித்தளமிட்டனர். ஆவியாரின் அருள்பெற்ற அமலவை இன்றுவரை அவரால் வழிநடத்தப்பட்டு வருகின்றது.

### 3. தூய ஆவியின் வழிநடத்துதல் நம் வாழ்வில்

தூய ஆவியாரால் நாம் வழிநடத்தப்படும்போது முதலில் தெரிகின்ற புறமாற்றம் நமது பேச்சு தான். பிறரோடுள்ள பேச்சு குறைந்து, ஆண்டவரோடுள்ள பேச்சு அதிகரிக்கும். நமது பேச்சும் வித்தியாசமாக மாறும். இதையே தூய பவுல், “உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், புகழ்பாக்கள், ஆவிக்குறிய பாடல்கள் இடம்பெறட்டும். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்வின் பெயரால் எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்” (எபே 5:19-20) என்கிறார்.

- நாம் பணியாளராய் மாறுவோம். அதாவது அன்பினால் ஒருவரையொருவர் மதிப்பது. குறைகளை பொறுமையாய் சகிப்பது. ஒருவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே ஏற்று அன்பு செய்வது.
- எப்போதும் பிறருக்கு உதவ தயாராயிருப்போம். யாருக்கு என்ன உதவலாம் என்ற சிந்தையே மேலோங்கி நிற்கும். அன்னை மரியா மேல் தூய ஆவியார் நிழலிட முதலில் சிந்தித்தது எலிசபெத்திற்கு எப்படி உதவுவது என்பதுதான். ஆள்துணை இல்லை என்றாலும், தான் இளம்பெண் என்றாலும், நீண்ட தூரம் பயணம் செல்ல வேண்டும் என்றாலும் இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் எலிசபெத்துக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமே இவரிடம் தலைதூக்கி நின்றது. ஆகவேஉடனே விரைந்து சென்றார் (லூக் 1:39)
- **சிந்திப்போம்:** நமது வாழ்வில் தூய ஆவியாரின் செயல்பாட்டை உணர்ந்த தருணங்களை எண்ணிப்பார்ப்போம். (நம் பணியில் ... பயணத்தில் ... குழப்பமான சூழலில்...)
- “பலரது நன்மைக்காகவும் பலரது மகிழ்ச்சிக்காகவும் துறவி பிறக்கிறான். துறவை மேற்கொண்டு இந்த இலட்சியத்தை மறப்பவனின் வாழ்க்கை முற்றலும் வீண்” என்கிறார் சுவாமி விவேகானந்தர். மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப, மக்கள் கடவுளை விட்டு வெகுதொலைவில் விலகிச் சென்றுள்ள இக்காலத்தில், நாம் நமது அர்ப்பண வாழ்வை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். துறவற வாழ்வின் பெருமையும் சாட்சியமும், அணியும் உடையிலும் சிலுவை அடையாளத்திலும் அல்ல. துறவற வாழ்வில் உள்ளம் ஊன்றி வாழ்வதிலும், நல்மாதிரிகளைத் தேடும் உலகிற்கு கிறிஸ்துவின் சாட்சியாக வாழ்வதிலுமே அடங்கியுள்ளது.
- இயேசுவின் முழுவாழ்வும் இறைப்பணியும் தூய ஆவியாருடன் இணைந்தே நடைபெற்றன. ஆவியின் கனிளையும் கொடைகளையும் வாழ்வாக்கிட வரம் வேண்டுவோம். ‘ஓ பரிசுத்த ஆவியே என் ஆன்மாவின் ஆன்மாவே! என்னை ஒளிரச் செய்து வழிகாட்டும். புது வலுவூட்டி என்னைத் தேற்றும். என் கடமை என்னவென்று காட்டும். அதைக் கருத்தாய் புரிந்திடத் தூண்டும்’. “முதலில் கையில் எண்ணெயைப் பூசு. பிறகு பலாப்பலத்தை அரி. இல்லையெனில் அதன் பிசின் உன் கையில் ஒட்டிக்கொள்ளும். முதலில் தூய ஆவியின் பக்தியை வளர்த்துக்கொள். பின்பு உலக காரியங்களில் ஈடுபடு. இல்லையெனில் உலகப்பற்று உன் உள்ளத்தில் ஒட்டிக்கொள்ளும்” என்பது ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவர்களின் வாக்கு. தூய ஆவியாரால் அருள்பொழிவு செய்யப்பட்டுள்ள நாம் நம் கைகளைப் பிறரை நோக்கி நீட்டி அவர்களுக்குப் பணி புரிவோம் (அன்னை தெரசா). “தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே அந்த ஆவிகாட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம்” (கலா 5:25).